THE EXAMINATION OF THE WITNESS
(Section 281 Code of Criminal Procedure)
IN THE JUDICIAL MAGISTRATE COURT, VALLIYOOR

Calender : **DVOP.8/2022** **PW.1**
Miscellaneous :
Preliminary Register :

STATEMENT OF WITNESS
Name : பாக்கியலெட்சுமி
Husband Name : நாராயணன்
Village :
Taluk :
Calling :
Religion :
Age : Date:31.07.2023.

(Petitiner Present, Respondent R1 present, R2 absent and petition U/s.126(2) Cr.P.C is filed and allowed)

**முதல் விசாரணை** :-

நான் இந்த மனுவின் மனுதாரர் ஆவேன். எதிர்மனுதாரர்கள் மீது குடும்ப வன்முறை தடுப்பு சட்டத்தின் கீழ் இந்த மனுவினை தாக்கல் செய்துள்ளேன். எனது தரப்பு சாட்சியத்தை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். நிரூபண வாக்குமூலத்திலுள்ள விபரங்கள் அனைத்தும் நான் படித்து பார்த்து, அவற்றை உண்மையென உறுதி கூறி நான் கையொப்பம் செய்துள்ளேன். நிரூபண வாக்குமூலத்திலுள்ள கையொப்பங்கள் என்னுடையது தான். எனது தரப்பு வழக்கிற்கு ஆதரவாக கீழ்கண்ட ஆவணங்களை குறியீடு செய்ய வேண்டுகிறேன்.

**ஆவணங்கள்** :

1. மனுதாரரின் ஆதார் அடையாள அட்டை நகல் (அசலுடன் ஒப்பிட்டுப்பார்த்து குறியீடு செய்யப்படுகிறது) **ம.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**
2. மனுதாரரின் கணவர் நாராயணின் இறப்பு சான்றிதழின் சான்றிட்ட நகல் **ம.சா.ஆ.2**

**ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

3. மனுதாரர் கணவர் பெயரில் உள்ள நத்தம் பட்டா எண்.351-ன் நகல்(அசலுடன் ஒப்பிட்டுப்பார்த்து குறியீடு செய்யப்படுகிறது) **ம.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

4. மனுதாரர் கணவர் பெயரில் உள்ள பஞ்சாயத்து கதவு எண்.112, ராஜபுதூர் வீட்டு வரி ரசீது அசல் **ம.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

5. 25.03.2021 தேதி மனுதாரரின் கணவர் திருக்குறுங்குடி காவல் நிலையத்தில் கொடுத்த புகார் மனுவின் மனு ஏற்பு ரசீது எண்.117/2021-ன் அசல் **ம.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

6. 20.07.2021 தேதி மனுதாரர் 1வது எதிர்மனுதாரர் மீது திருக்குறுங்குடி காவல் நிலையத்தில் கொடுத்த புகார் மனுவிற்கு கொடுத்த மனு ஏற்பு ரசீது எண்.320/2021-ன் அசல் **ம.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

7. 15.08.2021 தேதி மனுதாரர் எதிர்மனுதாரர்கள் மீது திருக்குறுங்குடி காவல் நிலையத்தில் கொடுத்த புகார் புகார் மனுவின் மனு ஏற்பு ரசீது எண்.366/2021ன் அசல் **ம.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

8. 25.01.2022 தேதி மனுதாரர் 1வது எதிர்மனுதாரர் மீது திருக்குறுங்குடி காவல் நிலையத்தில் கொடுத்த புகார் புகார் மனுவின் மனு ஏற்பு ரசீது எண்.37/2022 ன்அசல் **ம.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

9. 28.01.2022 தேதி மனுதாரர் எதிர்மனுதாரர்கள் மீது நாங்குநேரி காவல் உதவி கண்காணிப்பாளரிடம் கொடுத்த புகார் மனுவின் நகல் **ம.சா.ஆ.9 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

**மனுப்படி தீப்பாக வேண்டுகிறேன்.**

**<u>எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை</u>:**

1வது எதிர்மனுதாரர் ஆஜர், 2வது எதிர்மனுதாரர் ஆஜர் இல்லை, மனு தாக்கல். எதிர்மனுதாரர் தரப்பு வழக்கறிஞர் ஆஜர். எதிர்மனுதாரர் தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.